www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2023

## பொதுத் தமிழ்

வகுப்பு : 12 மதிப்பெண்கள் : 90
நேரம் : 3.00 மணி

பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 14x1=14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல் ...........
   அ. யாப்பெருங்கலக் காரிகை ஆ. தண்டியலங்காரம் இ. தொல்காப்பியம் ஈ. நன்னூல்
2. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் ........... அ. பருவநிலை மாற்றம்
   ஆ. மணல் அள்ளுதல் இ. பாறைகள் இல்லாமை ஈ. நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
3. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு? அ. செய்யாமல் செய்த உதவி
   ஆ. பயன் தூக்கார் செய்த உதவி இ. தினைத் துணை நன்றி ஈ. காலத்தினால் செய்த நன்றி
4. வியர்வை வெள்ளம் என்பதன் இலக்கணக் குறிப்பு
   அ. வினைத் தொகை ஆ. பண்புத் தொகை இ. உருவகம் ஈ. எண்ணும்மை
5. பொருத்துக.
   அ. பாலை பாடினான் - 1. தேரிரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
   ஆ. பாலைப் பாடினான் - 2. தேரினைப் பார்த்தான்
   இ. தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்
   ஈ. தேரைப் பார்த்தான் - 4. பாலைத் திணை பாடினான்
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும், குடும்பமும்
   இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும், சுங்கமும்
6. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்து உள்ளன அவை ........... அ. அறவோர், துறவோர் ஆ. திருமணமும், குடும்பமும்
   இ. மன்றங்களும், அவைகளும் ஈ. நிதியமும், சுங்கமும்
7. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
   அ. இலக்கியம் ஆ. கணிதம் இ. புவியியல் ஈ. வேளாண்மை
8. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
   அ. சிவஞான முனிவர் ஆ. மயிலை நாதர் இ. ஆறுமுக நாவலர் ஈ. இளம்பூரணர்
9. வேறுபட்டதை குறிப்பிடுக. அ. அண்மைக் காட்சி துணிப்பு ஆ. சேய்மைக் காட்சி துணிப்பு
   இ. நடுக்காட்சி துணிப்பு ஈ. காட்சி மறைவு
10. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் ...........
    அ. சோழன் நெடுங்கிள்ளியை, பரணர் ஆ. சோழன் நலங்கிள்ளியை, கோவூர் கிழார்
    இ. கரிகாலனை, உருத்திரங்கண்ணனார் ஈ. கணைக்கால் இரும்பொறையை, கபிலர்
11. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?
    அ. குறியீடு ஆ. படிமம் இ. அங்கதம் ஈ. தொன்மம்
12. தமிழுக்குத் தலை கொடுத்த வள்ளல் ...........
    அ. பேகன் ஆ. பாரி இ. குமணன் ஈ. நள்ளி
13. 'கூவல்' என்ற சொல்லின் பொருள் -----------
    அ. கடல் ஆ. ஆறு இ. கிணறு ஈ. ஏரி
14. புணர்ச்சி விதி தருக. நன்மொழி - நன்மை + மொழி
    அ. ஈறுபோதல் ஆ. முன் நின்ற மெய் திரிதல்
    இ. தன்னொற்று இரட்டல் ஈ. உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

பகுதி - 2

**பிரிவு - 1 : எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x2=6

15. சிற்பி பாலசுப்ரமணியம் இயற்றிய கவிதை நூல்கள் நான்கனைக் கூறுக.
16. 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற ராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்? அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
17. பகைவரால் அழிக்க முடியாத அரண் எது?
18. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

**பிரிவு - 2 : எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 3x2=6

19. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை?
20. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

**பிரிவு - 3 : எவையேனும் ஏழனுக்கு விடையளி.** 7x2=14

22. சொல்லைப் பிரித்தும், சேர்த்தும் தொடரமைக்க. பலகை
23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்.
அவர்கள் எல்லா பிரச்சனைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்

24. கீழ்க்காணும் சொல் உருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க. தானே <
25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. நிலத்தக் கௌறனும்; அப்பதான் வகுறு நிறையும்.
26. தொடரில் இடம் பெற்றுள்ள மரபு பிழைகளை நீக்கி எழுதுக.
வாழைக் காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காகங்கள் கூவிக் கொண்டும் இருந்தன.
27. எவையேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ. பூம்பாவாய் ஆ. தலைக்கோல்
28. எவையேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ. விம்முகின்ற ஆ. தொழுதனர்
29. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. கலம், களம்
30. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக. அ. உண்ணாது நோற்பார ----- ஆ. கல்வி கரையில ------.

## பகுதி - III

**பிரிவு - 1 : எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2x4=8

31. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருள் அகற்றும்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32. மயிலாப்பூர் சிறப்புகள் குறித்துத் திருஞானசம்பந்தர் கூறுவன யாவை?
33. சிற்றினம் சேராமையும், நல்லினத்தின் துணையும் ஆக வள்ளுவர் உரைப்பன பற்றி நீவிர் அறிவனவற்றை எழுதுக.
34. கடையேழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப் படுத்துக.

**பிரிவு - 2 : எவையேனும் இரண்டனுக்கு விடையளி.** 2x4=8

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் விளக்கம் தருக.
36. மையாடல் விழா குறிப்புத் தருக.
37. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38. வேளாண் மேலாண்மை குறித்து நீவீர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

**பிரிவு - 3 : எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி.** 3x4=12

39. அ. பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக. **(அல்லது)**
ஆ. உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன் உறைந்தற்று - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக.

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன்; திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள் தான் சிரித்ததுண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளி முத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை எல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென்றே இயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்தரித்த வண்ணம் தானோ?

- பாரதிதாசன்.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள் (அல்லது) யானைக்கு அடி சறுக்கும்.
42. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
அ. கபிலன் திறமையானவர் என்று ------------ (குமரன்) தெரியும்.
ஆ. நேற்று முதல் ---------- (அணை) நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
இ. உங்களுக்கு ---------- (யார்) நன்மை என நினைக்கிறீர்கள்
ஈ. முருகன் --------- (வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
43. கடல் அல்லது மலை என்னும் தலைப்பில் கவிதை ஒன்றினை எட்டு அடிகளுக்கும் மிகாமல் எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3x6=18

44. அ. வெகுளாமை குறித்துத் திருவள்ளுவர் உரைப்பன யாவை? **(அல்லது)**
ஆ. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட ராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப் பகுதி வழி நிறுவுக.
45. அ. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக. **(அல்லது)**
ஆ. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.
46. அ. கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேய பண்புகளை விளக்குக. **(அல்லது)**
ஆ. 'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியவை யாவை?

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4+2=6

47. அ. "குழல் வழி" ....... எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ. "சுடும்" என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.